**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.474/2023 |
| Deposition of witness for Prosecution | : | P.W-6 |
| Name | : | அங்குத்தாய், வயது 59 |
| Father Name/Husband Name | : | அம்புரோஸ் |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th day of September 2024.

**(எதிரி ஆஜர் இல்லை கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் உள்ளேன். சம்பவ சமயம் நாலாட்டின்புதூர் காவல் நிலையத்தில் பொறுப்பில் இருந்தபோது 28.05.2023 ஆம் தேதி அதிகாலை 05.00 மணிக்கு, நாமக்கல், பரமத்திவேலூர், செந்தில்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று அதன் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண்.96/2023 பிரிவுகள் 279, 304-A IPC ஆக வழக்கு பதிவு செய்தேன்.
2. என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கை நான் பதிவு செய்தது தான். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அசல் புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை ஆய்வாளர் பார்வைக்கும் வைத்தேன். வழக்கு பற்றி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. விபத்து ஏற்படுத்திய நபர் அ.சா.1 ற்கு முன் பின் அறிமுகம் இல்லாத நபர் என்றால் சரிதான். அவருடைய பெயர் முகவரி யாரிடம் இருந்து தெரிந்து கொண்டதாக புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகாரில் வாகனத்தை வெள்ளை கோடுகளுக்கு ஓரமாக நிறுத்தியிருந்ததாக சொல்லியுள்ளாரா என்றால்

சொல்லவில்லை.

2. நாலாட்டின்புதூர் மேம்பாலம் மூன்று வாகனங்கள் ஒரு சேர போகும் அளவிற்கு மூன்று ட்ராக்குகள் உள்ளன என்றால் சரியல்ல இரண்டு மெயின் சாலையும் இரண்டு சர்வீஸ் சாலைகளும் உள்ளன. அதில் எந்த பக்கம் நிறுத்தியிருந்ததாக சொல்லவில்லை என்றால் தெற்கில் இருந்து வடக்காக செல்லும் ரோட்டில் இடது புறம் நிறுத்தியிருந்ததாக சொல்லியுள்ளார்.
3. மேற்படி விவரத்தை தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. மேம்பாலத்திற்கு கீழ் பக்கம் தான் நாலாட்டின்புதூர் காவல் நிலையம் செல்லும் வழி என்றால் சரிதான். நடந்து சென்றால் கூட 5 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான்.
4. அ.சா.1 கொடுத்த புகார்மனுவில் 4 மணிநேரம் காலதாமதமாக புகார் கொடுத்ததற்கான காரணம் பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நீங்கள் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சொன்னவிதத்தில் அ.சா.1 நிலையம் ஆஜராகி புகார் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.
5. இவ்வழக்கில் இறந்து போன நபருக்காக பின் யோசனை செய்து புகார் பெறப்பட்டுள்ளது என்றாலும் அ.சா.1 காப்பாற்ற வேண்டி பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.